# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF FAST TRACk COURT, KARAIKUDI.
## C.C. No.33/2021 P.W.13

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ரவிசந்திரன் | த-பெ | கணபதி |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 53/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | சிறப்பு சார்பு ஆய்வாளர் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **24.02.2026**

**எதிரிகள் ஆஜர்.**

-------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

1. நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து காரைக்குடி குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். இந்த வழக்கின். இந்த வழக்கின் விசாரணை அதிகாரிகளான சண்முகவேல் மற்றும் ஆறுமுகம் ஆகியோர்கள் பணிமாறுதல் மற்றும் பணி ஓய்வு பெற்றுவிட்ட காரணத்தால் கால தாமதத்தை தவிர்க்கும் பொருட்டு அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க எதிரிகள் தரப்பில் ஆட்சேபனை இன்றி நீதிமன்ற அனுமதியுடன் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். விசாரணை அதிகாரி மலைராஜ் சார்பு ஆய்வாளர் என்பவர் 10.07.2006 அன்று காலை 11.45 மணிக்கு பணியில் இருந்தபோது பாலகிருஷ்ணன் என்பவர் நிலையம் ஆஜர் ஆகி கொடுத்த புகாரைப்பெற்று நிலைய குற்ற எண். 522/2006 பிரிவுகள் 457,380 இதச பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். **புகார் அசாஆ 17.**

2. பின்னர் இந்த வழக்கின் சாட்சிகளை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கு கோப்பை மேல் விசாரணைக்காக சண்முகநாதன் மற்றும் கண்ணன் ஆகியோர் வசம் ஒப்படைத்துள்ளார். மேற்படி விசாரணை அதிகாரிகள் வழக்கின் சாட்சிகளை விசாரணை செய்து ஆவணங்களில் கையொப்பங்கள் பெற்று மீண்டும் மேல் விசாரணைக்காக திரு. சண்முக வேல் மற்றும் திரு. ஆறுமுகம் ஆகியோர்கள் வசம் ஒப்படைத்துள்ளார். மேல் விசாரணைக்கு எடுத்து கொண்ட மேற்படி விசாரணை அதிகாரிகள் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 11 வரையிலானவர்களை விசாரணை செய்தபோது முந்தைய விசாரணை அதிகாரிகளிடம் சொன்ன

விபரங்களை சொன்னதால் மீண்டும் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. பிற சாட்சிகளை விசாரணை செய்து எதிரிகள் மீது குற்ற முகாந்திரம் இருந்த காரணத்தால் 27.09.2007 அன்று ஆறுமுகம் காவல் ஆய்வாளர் மேற்சொன்ன பிரிவுகளின் அடிப்படையில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை**

புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரை முறையாக புலன் விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. குற்ற இறுதி அறிக்கையில் கூறியது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த புகார் மற்றும் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.24 15:42:03 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.